மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 287, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

287—

பாலம்

***2763—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை தொகுதி, பெரியகண்ணூர் நாட்டார் கால்வாய் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

பெரியகண்ணூர் நாட்டார் கால்வாய் குறுக்கே தரைமட்டப் பாலத்திற்கு மாற்றாக, ரூபாய் 3.50 கோடி செலவில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பாலம் மேலூர், இராமநாதபுரம் செல்லக்கூடிய நெடுஞ்சாலையில் உள்ளது. அங்கே சிவகங்கை, பரமக்குடி,*

2013 ஏப்ரல் 22]

இளையான்குடி போன்ற முக்கிய பெரிய நகரங்கள் இருக்கின்றன. எனவே, அவசியம் கருதி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்று அறிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை இந்த ஆண்டே எடுத்து நிறைவேற்றித் தருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதி, இராமநாதபுரம்—மேலூர் சாலையில், மாநில நெடுஞ்சாலை எண் 34—ல், கி.மீ. 60/10—ல் நாட்டார் கால்வாய் குறுக்கிடுகிறது. நீர்வழிப் பாதையின் அகலம் 70 மீட்டர் ஆகும். இங்கு ஏற்கெனவே தரைமட்ட தாம்போகி உள்ளது. இதற்கு மாற்றாக ரூபாய் 3.50 கோடி ரூபாய்ச் செலவில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அனுமதி வேண்டி நிதித் துறைக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன், உடனடியாக பாலப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நாட்டார் கால்வாய் குறுக்கிடுகிற பல இடங்களில், எங்கள் சிவகங்கை தொகுதியில் முடிக்கரை, விளாங்காட்டூர், தமராக்கி போன்ற இடங்களில் இருக்கக்கூடிய சாலைகள் எல்லாம், ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றன. அந்தத் துறையில் மிகப் பெரிய பாலப் பணிகளை எடுப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டார் கால்வாய் செல்லக்கூடிய பல இடங்களில், குறிப்பாக எங்கள் தொகுதியில், முடிக்கரை, விளாங்காட்டூர், தமராக்கி போன்ற இடங்களில் இத்தகைய தரைப் பாலங்கள் இருக்கின்றன. ஆனால், அந்தச் சாலைகள் எல்லாம் ஊரக வளர்ச்சித் துறையின்கீழ்

இருக்கிற காரணத்தால், மிக அதிக அளவிலான செலவுகள் செய்து, அத்தகைய பாலங்களைக் கட்டுவதற்கான வாய்ப்பு இல்லை என்று கூறுகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட இடங்களில் உள்ள அத்தகைய பெரிய பாலப் பணிகளை, ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் எடுத்துச் செய்யாமல், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக எடுத்துச் செய்வதற்கான நடவடிக்கையை நமது அரசு எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறைக்குச் சம்பந்தப்பட்ட சாலைகளில் எல்லாம், தற்போது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பாலங்கள் எல்லாம், ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் குறுக்கிடுகின்ற பாலங்களாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 288, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

288—

கால்நடை மருத்துவமனை

***6989—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, கல்லாநத்தம் ஊராட்சியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?